Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.194/2020

| | | |
|---|---|---|
| | | Prosecution PW8 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | கே.பி. விக்னேஷ் |
| Father's Name | : | பாலசுப்பிரமணியன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி** ஆஜர் இல்லை**.** கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது**.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **01.02.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது சின்ன சேலம் கரூர் வங்கியில் கிளை மேலாளராக உள்ளேன். கடந்த 03.11.2020 ம் தேதியில் நான் கரூர் மாவட்டம் கரூர் வைஸியா வங்கி எல்.என்.எஸ்

s/d. K. Ambiga

கே.பி. விக்னேஷ் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கிளையில் மேலாளராக பணியில் இருந்தபோது கரூர் மாவட்ட குற்றப் பிரிவு போலிசார் எங்கள் வங்கிக்கு வந்து எங்கள் கிளையில் உள்ள கணக்கு எண்.1152155000010900 வைத்திருக்கும் எஸ்.காளியப்பன் என்பவரது வங்கிப் பரிவர்த்தனையை கேட்டார்கள். 01.04.2018 லிருந்து 30.04.2018 ம் தேதி வரைக்கான வங்கிக் கணக்கின் பரிவர்த்தனையை கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-2 ஆன வங்கி ஸ்டேட்மென்ட் ஆனது நான் வழங்கியதுதான். 19.04.2018 ம் தேதியில் வங்கிக் கணக்கு எண்.1152155000010900 ல் ரூபாய் மூன்று இலட்சத்தை காளியப்பன் வைப்பீடு செய்துள்ளார். அதற்குப்பிறகு மேற்கண்ட வங்கிக் கணக்கிலிருந்து அதே தேதியில் ரூபாய் மூன்று இலட்சத்தை பாலமுரளி என்பவர் கணக்கு வைத்துள்ள கரூர் வைஸியா வங்கி வெங்கமேடு கிளையின் கணக்கு எண்.1631155000000120 என்ற கணக்கிற்கு காசோலை மூலமாக பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் 03.11.2020 ம் தேதியிட்ட மேற்படி சங்கதிகள் அடங்கிய கடிதத்தை என்னால் வழங்கப்பட்டதுதான். அந்த கடிதம் அ.சா.ஆ-5 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

கே.பி. விக்னேஷ்